மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 166 மற்றும் 167 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 168, திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

168—

பால் குளிரூட்டும் நிலையம்

***41290—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபிசெட்டிப்பாளையம், கொளப்பனூர் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோபிசெட்டிப்பாளையம், கொளப்பனூர் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபிசெட்டிப்பாளையம் தொகுதியானது விவசாயத்தையே நம்பியிருக்கிற தொகுதியாகும். அதில் குறிப்பாக கொளப்பனூர் பேரூராட்சியைச் சுற்றி சுமார் 35–க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு வசிக்கும் விவசாயப் பெருமக்களும், விவசாயக் கூலிகளும் தங்கள் உபதொழிலாக, கால்நடைகளை அதிகம் வளர்த்து வருகின்றனர். இந்தக் கால்நடைகளின் மூலம் கிடைக்கின்ற தரமான பாலை 38 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஈரோடு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்குத்தான் அனுப்ப வேண்டியுள்ளது. எனவே, கேட்காமலேயே கொடுத்துக் கொண்டிருக்கும் எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியில் அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2005 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்வரும் காலங்களில் அந்தப் பகுதியில் பால் உற்பத்தியின் அளவைக் கணக்கில் எடுத்துக் கொண்டும், நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, மொத்த பால் குளிரூட்டும் இயந்திரம் ஒன்று அமைக்கப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எஸ். ரமணீதரன்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின்மூலம் விவசாயிகளிடம் கிடைக்கின்ற பாலைக் கொள்முதல் செய்யும்போது ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகளும், விவசாயக் கூலிகளும் தங்கள் விவசாயப் பணியை முடித்துக் கொண்டு அவர்கள் தங்களிடமுள்ள பாலை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கொள்முதல் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல முடிவதில்லை. எனவே, கூட்டுறவு ஒன்றியங்களின்மூலம், கூடுதல் பால் உற்பத்தி நிலையங்கள் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தி செய்யப்படுகிற சங்கங்களிலிருந்து ஒன்றியங்களில் உள்ள குளிர்விக்கும் நிலையங்களுக்குக் கொண்டு வருவதற்கு பால் சேகர வழித்தட லாரிகள் மூலமாக பால் எடுத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த நடைமுறையிலேதான் அந்தப் பணி நடைபெற்று வருகிறது. அவர் குறிப்பாக எந்தச் சங்கத்திலிருந்து பால் கொண்டு வருவதிலே சிக்கல் இருக்கிறது என்று சொன்னால், அவ்வாறு குறிப்பிட்ட அந்த நேர வழித்தடங்களை மாற்றியமைத்து அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது உற்பத்தி செய்யப்படுகிற சங்கங்களின் மூலமாக கொள்முதல் செய்யப்படுகிற பாலைக் குளிர்விக்கவும் பதப்படுத்தவும் போதுமான அளவு வசதிகள் இருக்கின்றன. எதிர்வரும் காலத்தில் தூய்மையான பால் உற்பத்தி என்கிற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, தேவையான இடங்களில் மொத்த பால் குளிர்வு இயந்திரங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் தயார் செய்யப்பட்டு, தற்போது அந்தப் பணி நடைபெற்று வருகிறது. தேவைப்படுமானால் உறுப்பினர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அந்த இடங்களிலே, பால் உற்பத்தி அதிகம் இருந்தால் தேவையான இடங்களில் அந்தப் பால் குளிரூட்டும் இயந்திரம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 169, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

169—

பருத்தி இறக்குமதி

***6859—திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திற்குத் தேவையான பருத்தி பற்றாக்குறையைச் சமாளிக்க வெளிநாட்டிலிருந்து தரமான பருத்தியை வருவிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு சுமார் 40 இலட்சம் பேல்கள் பருத்தி தேவைப்படுகிறது. ஆனால், தமிழகத்தில், மொத்தமே 5 முதல் 6 இலட்சம் பேல்கள் வரையே பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, தனியார் நூற்பாலைகள் வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து பருத்திக் கொள்முதல் செய்து நூல் உற்பத்தி செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. மா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை இந்தியாவிலே எல்லாத் துறைகளிலும் முதன்மையான மாநிலமாகக் கொண்டு வருவதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைப் பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. ராஜகோபால்.

திரு. ஆ. ராஜகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி சாகுபடியைப் பொறுத்த அளவிலே, அதிகரித்து வருகின்ற வேளாண்மை உற்பத்திச் செலவின் காரணமாக per acre yield,